தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 44 /பேரூ/2021

நாள் 07.12.2021

திரு. எம். ராஜசேகரன்,
பொத்தனூர், நாமக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பொத்தனூர் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட 27/8 கிழக்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் என்பவரது 13.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.5.2020ல் பெறப்பட்டு 44/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட 27/8 கிழக்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் தமது 13.3.2020 நாளிட்ட மனுவில் பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி, வார்டு எண்.7ல் சர்வே எண்.91/1A1 பொத்தகாரன் தோட்டத்தில் 0.79.40 ஏக்கர் நஞ்சை நிலங்களை, அரசின் தடையாணையை மீறி, வீட்டு மனைகளாக மாற்றி, அங்கு தார் சாலை, கழிவுநீர் கால்வாய் வசதி, மின்சார வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றை வழங்கியுள்ளதோடு, அவ்விடங்களில் வீடு கட்ட வரைபட ஒப்புதல் மற்றும் வீட்டுவரியும் பொத்தனூர் பேரூராட்சி வசூலித்துள்ளதால், பொத்தனூர் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பேரூராட்சியின் தலைவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கவும், அவர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கோரியும் விசாரணை மேற்கொண்டு உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கப்பட்டு, அவரது புகார் மனு மீது பொத்தனூர் பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை கோரப்பட்டது. பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 20.7.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 91/1A1 பொத்தகாரன் தோட்டம் என்ற இடமானது அலுவலக ஆவணங்களின்படி வார்டு எண்.7 திருவள்ளுவர் சாலை–2 என உள்ளது என்றும், மேற்படி இடத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே குடியிருப்புகளுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டு, தற்போது 160க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அனைத்து வீடுகளுக்கும் முறையாக அரசு நிர்ணயித்த கட்டணங்கள் மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு, கட்டிட உரிமம் அனுமதி வழங்கப்பட்டு, சொத்துவரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறதாகவும், அரசினால் வழங்கப்பட்ட அனைத்து நிதிகளும் பொது மக்களின் அத்தியாவசிய தேவையான சாலை வசதி, வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கு முறையாக செலவிடப்பட்டுள்ளதென்றும், இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 01.01.1990 முதல் 20.7.2021 வரை சார்பதிவாளர் அலுவலக சொத்து தொடர்பான ஆவணங்களில் சர்வே எண்.91/1A1 "மனைப்பிரிவு" (Housing site) என உள்ளதென்றும், அதற்கு ஆதாரமாக பதிவுத்துறையால் வழங்கப்பட்ட "சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று" (Certificate of Encumbrance) நகல்களையும் ஆதாரமாக இணைத்தனுப்பிவைத்துள்ளார். மேலும் சர்வே எண்.91/1A1ல் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு பேரூராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தார் சாலை வசதி, சிமெண்ட் சாலை வசதி மற்றும் வடிகால் வசதி அமைக்கப்பட்டுள்ளதற்கான புகைப்பட நகல்களையும் பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

3. மனுதாரரது புகார் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், சான்றிதழ்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- ❖ மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 91/1A1 பொத்தகாரன் தோட்டம் என்ற இடமானது அலுவலக ஆவணங்களின்படி வார்டு எண்.7 திருவள்ளுவர் சாலை–2 என உள்ளது என அறியமுடிகிறது

- ❖ மேற்படி இடத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே குடியிருப்புகளுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டு, தற்போது 160க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளதாக பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையின்படி தெளிவாகிறது.

- ❖ மேலும், அனைத்து வீடுகளுக்கும் முறையாக அரசு நிர்ணயித்த கட்டணங்கள் மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு கட்டிட உரிம அனுமதி வழங்கப்பட்டு, சொத்துவரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறதாகவும், அரசினால் வழங்கப்பட்ட

அனைத்து நிதிகளும் பொது மக்களின் அத்தியாவசிய தேவையான சாலை வசதி, வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கு முறையாக செலவிடப்பட்டுள்ளதென்றும், இதில் எவ்வித முறைகேடுகளும் நிகழவில்லை என்பது ஊர்ஜிதமாகிறது

- மேலும், சார் பதிவாளர் அலுவலக **01.01.1990** முதல் **20.7.2021** வரையிலான காலங்களுக்கான சொத்து தொடர்பான ஆவணங்களில் சர்வே எண்.91/1A1 “மனைப்பிரிவு'' (Housing site) என குறிப்பிடப்பட்டுள்ளது. இது பதிவுத்துறையால் வழங்கப்பட்டுள்ள “சொத்து தொடர்பான வில்லங்கச் சான்றின்படி (Certificate of Encumbrance) உறுதியாகிறது

4. இந்நிலையில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், பிரிவு 10 (3) (c)ன்படி “முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது” என குறிப்பிடப்பட்டுள்ளதால், பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களது அறிக்கையினை ஏற்று, மனுதாரர் திரு. M. ராஜசேகரன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13.3.2020 நாளிட்ட புகார் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாதென்று முடிவுசெய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு.M. ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு, பொத்தனூர் மற்றும் அஞ்சல், நாமக்கல் மாவட்டம்–638 181.

செயல் அலுவலர்,
பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி, பொத்தனூர், நாமக்கல் மாவட்டம்–638 181.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்